**இம்புல்பே பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 16 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 25 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இம்புல்பே பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 85,420 கூட்டுத்தொகையான நிலுவை நீர்க் கட்டணம் மற்றும் நிலுவை வரித்தொகை தொடர்பாக சபையினால் இரண்டு நபர்களுக்கு எதிராக பலாங்கொடை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்த 02 வழக்குகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோர் பேரேட்டின் பிரகாரம் ரூபா 11,741,024 தொகையான செலவினம் கடன்கொடுத்தோரில் ரூபா 12,320,823 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 24,262,156 தொகையான திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறைக் கணக்கின் மீதி நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 24,339,791 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ''பிளிசறு'' கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் சபையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 300,000 தொகையான ''சீவர்'' இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் வீட்டுக் கடன் வட்டிகளில் அரசாங்கத்தின் பங்களிப்பான ரூபா 96,984 தொகை ஆண்டின் வருமானமாகவும் செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபை அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் அகற்றப்பட்ட ரூபா 9,546 தொகையான நூலகப் புத்தகங்கள் கணக்குகளிலிருந்து பழிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த ரூபா 39,998 பெறுமதியான 138 நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டில் சபையின் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 1,431,938 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நானாவித வைப்புப் பதிவேட்டின் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 1,918,562 தொகை, நானாவித வைப்புக்களின் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 7,282,139 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஒ) முற்பணப் பதிவேட்டின் மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 8,148,962 தொகை முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் ரூபா 6,976,819 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஓ) ஊழியர் கடன் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் ஊழியர் கடன் பதிவேட்டின் தனிப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகைக்குமிடையேயான ரூபா 77,691 ஆன வேறுபாடு திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த ஏக்கர் வரி ரூபா 78,200 தொகை 2017 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 2,911,034 தொகையில் ரூபா 2,110,750 அதாவது 73 சதவீதம் 2017 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 04 நிலையான சொத்து விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான பட்டோலை மற்றும் ஏனைய 02 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான காலப்பகுப்பாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 141(2) | ரூபா 377,588 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகளின் 10 சந்தர்ப்பங்களின் போது காசோலை அடியிதழ்களில் சிற்றொப்பம் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 371(5) | 2002 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபா 8,148,962 கூட்டுத்தொகையான 128 உபகட்டுநிதிகள் 2017 யூலை வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 395(இ) | சபையின் சுற்றாடல் நடைமுறைக் கணக்கு தொடர்பாக 2001 ஆம் ஆண்டு முதல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை |
| (iv) | நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 7,282,139 தொகை ஒவ்வொரு அரையாண்டு இறுதியின் போதும் பட்டியல் தயாரித்து உரித்து கோரப்படாத ‘‘காலாவதியான’’ வைப்புக்களை ஒய்வுபெறச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி

| | | |
|---|---|---|
| (i) | விதி 96 | ரூபா 175,000 கூட்டுத்தொகையான 03 முற்பணங்களை தீர்க்கும் போது உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | விதி 185 | சபையினால் பேணப்படுகின்ற நடைமுறைக் கணக்கொன்றில் 2015 சனவரி முதல் திசெம்பர் வரை ஒவ்வொரு மாதமும் ரூபா 1,000,000 இற்கு மேற்பட்ட மீதியொன்று காணப்பட்ட போதிலும் அப்பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) | 1975 இன் உள்ளூராட்சி ஓய்வூதியக் கட்டளையின் 36 ஆம் பிரிவு | 1993 செப்தெம்பர் 03 ஆந் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சேவையின் ஓய்வூதிய உத்தியோகத்தருக்கு ஓய்வூதியம் செலுத்துவதற்காக சபையினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் |

| | | |
|---|---|---|
| | | செலுத்த வேண்டிய உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்புப் பணத்தின் கூட்டுமொத்தமான ரூபா 160,708 இனைச் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2012 சனவரி 05 ஆந் திகதிய 01/2012 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.2 ஆம் பந்திகள் | ஒப்பந்தக்காரரொருவரைத் தெரிவு செய்யும் போது பின்பற்றப்பட வேண்டிய தேவைகள் கடைப்பிடிக்கப்படாமல் மதிப்பீட்டு வேலைப் பெறுமதி ரூபா 9,213,049 தொகையான 20 ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. |
| (உ) | 2015 யூலை 15 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2013 யூன் 05 ஆந் திகதிய PCMO/PR/2013 ஆம் இலக்க சனாதிபதி செயலாளரின் கடிதம் | செயலிழந்த நிலையில் காணப்படுகின்ற மோட்டார் சைக்கிள் மற்றும் கெப் வண்டி என்பவற்றை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,811,194 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,615,154 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 803,960 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆதனவரி

---------------------

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் நிலுவையாகக் காணப்பட்ட ஆதனவரிக் கட்டணம் ரூபா 37,540 தொகை 2017 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முத்திரைக் கட்டணம்

-----------------------------------

2015 சனவரி முதல் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரியதாகக் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை இனங்கண்டு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2017 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீதிமன்றத் தண்டப் பணம்

------------------------------------------------

2016 மே முதல் திசெம்பர் வரை அறவிட வேண்டிய ரூபா 490,325 தொகையான நீதிமன்றத் தண்டப் பணத்தை மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து அறவிடுவதற்கு 2017 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------------------

**3.1 முகாமைத்துவ செயற்பாடுகள்**

----------------------------------------------------

49 பதவியணியினரை உள்ளடக்கிய சபையின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்கைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கைவிரல் அடையாள இயந்திரமொன்று 2015 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றாக அது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 பெப்ரவரி மாதம் பூர்த்தி செய்யப்பட்ட கெபொக்வத்த கழிவுப் பொருள் முகாமைத்துவ வளவில் உள்ள கொங்கிரீட் வீதியின் மேற்பரப்பில் 7.7 மீற்றரும் 1.5 மீற்றர் அகலமுமான பகுதி உடைந்து வீதியிலிருந்து வெளியே தள்ளப்பட்டிருந்த போதிலும், அதனை சரிசெய்துகொள்வதற்கு 2017 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) றத்மலவின்ன பல்நோக்குக் கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 980,000 ஒப்பந்தப் பெறுமதியில் 2014 செப்தெம்பர் 11 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் அத்திவாரம் மற்றும் 21 கொங்கிரீட் தூண்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 255,045 தொகை செலுத்தப்பட்டதன் பின்னர் 2014 திசெம்பர் முதல் நிர்மாணங்கள் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த வளவில் காடு வளர்ந்திருந்தமை மற்றும் கொங்கிரீட் தூண்களின் அகலத்தில் உள்ள கம்பி துருப்பிடித்திருந்தமையினால் அந்த செலவினங்கள் பயனற்ற செலவினமாயிருந்தது.

### 3.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

---------------------------------

ரூபா 3,450,000 பெறுமதியான சபைக்குச் சொந்தமான 02 வாகனங்கள் இரண்டு வருடங்கள் முதல் நான்கு வருடங்கள் வரையிலான காலமாக விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.4 மனித வளமுகாமைத்துவம்

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச முகாமைத்துவ உதவியாளர் அதிவிஷேட தரத்தின் செயலாளர் பதவி வெற்றிடமாக இருந்ததுடன் அரச முகாமைத்துவ தரம் I இன் உத்தியோகத்தரொருவர் 2014 ஆம் ஆண்டின் மே முதல் செயலாளர் பதவியில் பதில் கடமை பார்ப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஆ) 02 வருமானப் பரிசோதகர் பதவிகள், ஒரு ஆயுர்வேத மருந்து கலவையாளர், 02 சுகாதாரத் தொழிலாளர்கள், நூலகரொருவர், அபிவிருத்தி உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் காணப்படுகின்ற 08 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் உரிய பணிகள் மற்றும் நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு இடையூறாக இருந்தது.

**3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருள்களிலிருந்து மீள்சுழற்சி செய்யமுடியாத கழிவுப் பொருட்கள் அண்ணளவாக 90 தொன் அளவில் சுற்றாடலுக்கு பாதகத்தை ஏற்படுத்தாத வகையில் அகற்றுவதற்கான முறைமையொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் தரையில் குவிக்கப்பட்டு தீ வைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ‘‘பிளிசறு’’ தேசிய கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மானியத்தின் அடிப்படையில் ரூபா 8,864,327 தொகை செலவில் ‘‘றை கெபொக்வத்த’’ என்ற பெயருடைய இடத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2016 பெப்ரவரி மாதம் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த நிலையத்திற்கு வருடாந்தம் சேகரிக்கப்படுகின்ற உக்கும் கழிவுப் பொருட்களில் 720 தொன்களை சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கான முறைமையொன்று 2017 யூன் வரையிலும் தயாரிக்கப்படாமையினால் செயற்திட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**04 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டில் சபையின் மீண்டெழும் செலவினத்திற்காக மதிப்பிடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 46.51 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 32.33 மில்லியனாக இருந்தமையால் நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 14.18 மில்லியன் அதாவது 30 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மூலதனச்

செலவினத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 1.77 மில்லியனாக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 6.37 மில்லியன் ஆனமையால் நிதி ஏற்பாட்டை விஞ்சி ரூபா 4.60 மில்லியன் அதாவது 260 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியமையினால் ரூபா 50,000 வருமானமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து எந்தவொரு வருமானத்தையும் உழைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பாதீடு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்படாமை |
| | (ii) | வருமானம், செலவினம் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறைவாகவும் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | நிதி ஏற்பாடுகளில் கவனத்திற் கொள்ளக்கூடிய சேமிப்பு காணப்பட்டமை |
| | (ii) | மதிப்பிடு செய்யப்பட்ட வருமானம் அறவிடப்படாமை |
| | (iii) | குறைநிரப்பு மதிப்பீடு தயாரிக்கப்படாமை |
| (இ) வருமான நிர்வாகம் | | நிலுவை வருமானம் அறவிடப்படாமை |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | | வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை |
| (உ) மனித வள முகாமைத்தும்வம் | | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | (i) | முறையான பிரகாரம் கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமை |
| | | (ii) | கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாமை |
| (எ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) | திட்டத்தின் பிரகாரம் வேலை பூர்த்தி செய்யப்படாமை |
| | | (ii) | நிர்மாணங்கள் உரிய பிரகாரம் பராமரிக்கப்படாமை |